## 16.12 ஊரக பகுதிகளில் சோடியம் விளக்குகள் நிறுவுதல் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் குறித்த வரையறைகள்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.தி.–III) துறை

அரசாணை (நிலை) எண். 74 நாள் : 11.7.2006

படிக்க :

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் கடித நக. எண். 2006/எஸ்.எஸ்–3, நாள் 17.06.2006.

**ஆணை**

மேதகு ஆளுநர் அவர்கள் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 13–வது புதிய சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் புதிய அரசு கடைபிடிக்க வேண்டிய கொள்கைகளைப் பற்றி விளக்கும்போது ஊரகப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இவ்வரசு முக்கிய கவனம் செலுத்தும் எனவும் கிராமங்களின் மையப் பகுதிகளில் சாதாரணமாக மக்கள் கூடுமிடங்களில் சோடியம் ஆவி விளக்குகள் நிறுவுவதற்கும், சிமெண்ட் கான்கிரீட் சாலை போடுவதற்கும் அரசு உயர்வான முன்னுரிமை அளிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2) தமிழ்நாட்டில் 12,618 ஊராட்சிகளும், 81,787 குடியிருப்புகளும் உள்ளன. ஊராட்சிகள் பரப்பளவில் வேறுபடுவதால் ஒரு குடியிருப்பை ஒரு அலகாக எடுத்துக் கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும் என்றும் ஆகையால் சோடியம் விளக்குகள் நிறுவுவதற்கும், சிமெண்ட் கான்கீரீட் சாலைகள் அமைப்பதற்கும், வரையறைகள் நிர்ணயிக்கப்படலாம் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். நாற்பது எல்.பி.சி.டி. பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படும் ஊரக குடியிருப்புகளுக்கு சில குறிப்பான வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது போன்று சில வரையறைகள் தேவையென ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். இவ்வரையறைகளை நிர்ணயித்தல் கீழ்கண்டவாறு இருவித நன்மைகளை உருவாக்கும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1. இலக்கினை அடைவதற்கு இதனை குறிக்கோளாகக் கடைபிடித்தல்.
2. அனைத்து குடியிருப்புகளுக்கும் இவ்வசதிகள் சமச்சீராகச் செய்யப்பட்டுள்ளன என உறுதி செய்தல்.
3. தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஊரக பகுதி குடியிருப்புகள் 81,787. இக்குடியிருப்புகள் மக்கள் தொகைக்கேற்ப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டால் கீழ்வருமாறு அமையும்.

| | | |
|---|---|---|
| 1. | 500க்கும் குறைவான கொண்ட குடியிருப்புகள் | 60459 |
| 2. | 501 முதல் 1000 வரையிலான கொண்ட குடியிருப்புகள் | 15510 |
| 3. | 1001 முதல் 3000 வரையிலான மக்கள்தொகை கொண்ட குடியிருப்புகள் | 5726 |
| 4. | 3001க்கு மேலான மக்கள்தொகை கொண்ட குடியிருப்புகள் | 92 |
| | | 81787 |

## 16. GENERAL FUND WORKS

4. ஊரகப் பகுதிகளில் விளக்குகள் நிறுவுவதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட வரையறைகளை (Suggested Norms) ஏற்று சோடியம் ஆவி விளக்குகள் நிறுவ கீழ்கண்ட வரையறைகளை நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 500க்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகள் | ஒரு குடியிருப்பிற்கு 2 சோடியம் ஆவி விளக்குகள் ( 2 per habitation) |
| 2. | 501 முதல் 1000 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகள் | ஒரு குடியிருப்பிற்கு 4 சோடியம் ஆவி விளக்குகள் (4 per habitation) |
| 3. | 1001 க்கும் மேலான மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகள் | ஒரு குடியிருப்பிற்கு 6 சோடியம் ஆவி விளக்குகள் (6 per habitation) |

ஒரு தடவை இந்த வரையறைகள் அனைத்து குடியிருப்புகளிலும் செயல்படுத்தப்பட்ட பின் தேவைகளின் அடிப்படையில் மேலும் அதிக சோடியம் ஆவி விளக்குகள் ஊரகப் பகுதிகளில் நிறுவுதல் பற்றி பரிசீலிக்கலாம்.

5) ஊரக பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைப்பதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ள வரையறைகளை ஏற்று ஊரகப் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்க கீழ்கண்ட வரையறைகளை நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 500க்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகள் | 250 மீட்டர் |
| 2. | 501 முதல் 1000 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகள் | 750 மீட்டர் |
| 3. | 1001 முதல் 3000 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புகள் | 1500 மீட்டர் (1.5 கி.மீ) |
| 4. | 3001க்கும் மேலான மக்கள்தொகை கொண்ட குடியிருப்புகள் | 3000 மீட்டர் (3 கி.மீ) |

6. இந்த பணிகளை உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதியினையும், நடைமுறையிலுள்ள மாநிலத் திட்டங்களின் நிதியினையும் பயன்படுத்தி செயல்படுத்த வேண்டும்.

7. இந்த வரையறைகளை அனைத்து ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மாவட்ட ஊராட்சிக்கும் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்